6. அறிவிப்புகள்– தொடர்ச்சி

(இ) சட்டமன்ற உறுப்பினர்களுக்கு சிற்றுண்டி வழங்கல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மதியமும் பேசுகிறீர்களா, அப்படியானால் உங்களது பேச்சுக்கு ஒரு இடைவேளை. பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

மாலை சட்டமன்றப் பேரவையின் கூட்டம் நடைபெறவிருப்பதால் மாலை 4–30 மணியளவில் சட்டமன்றப் பேரவை மண்டபத்தையொட்டிய பகுதியில் உறுப்பினர்களுக்கு சிற்றுண்டி வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவையின் காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை, மீண்டும் பிற்பகல் 4–30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1–31 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

பிற்பகல் 4–30

பிற்பகல் 4–30 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

7. மானியக் கோரிக்கைகள், 2001-2002, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வி.கே. லட்சுமணன்.

திரு. வி.கே. லட்சுமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1984 ஆம் ஆண்டு, மறைந்த அமரர் ராஜீவ் காந்தி அவர்கள் தேசிய கல்விக் கொள்கையை அறிவித்தபோது, கல்விக்காக செலவிடுகிற பணம் ஒரு முதலீடு, investment என்று சொன்னார்கள். அதேபோல தமிழக அரசும் கல்விக்காக ஒதுக்குகிற பணத்தை 30 சதவிகிதமாக உயர்த்த வேண்டுமென்று நான் இங்கே தமிழக முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். கொடுக்கப்பட்டிருக்கிற இந்த கொள்கை விளக்கக் குறிப்பிலேயிருக்கின்ற அட்டவணையிலிருந்து